# பெறுகைகளுக்கான அறிவித்தல் (2023/01)

## வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

## வைத்தியசாலைகளுக்கு மூல உணவுகளை வழங்குவதற்கான பெறுகைகள் -2023

தலைவர், திணைக்கள பெறுகைக் குழு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் கீழ்வரும் வைத்தியசாலைகளுக்கு மூல உணவுகளை வழங்குவதற்குத் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து 16.04.2023 இலிருந்து 31.12.2023 வரையான காலப்பகுதிக்கு பொறியிடப்பட்ட விலைமனுப்பத்திரங்களினை கோருகின்றார்.

| விபரங்கள் | | ஆதார வைத்தியசாலை-தெல்லிப்பளை | மாவட்ட பொது வைத்தியசாலை - கிளிநொச்சி | மாவட்ட பொது வைத்தியசாலை - வவுனியா | மாவட்ட பொது வைத்தியசாலை - மன்னார் | மாவட்ட பொது வைத்தியசாலை - முல்லைத்தீவு |
|---|---|---|---|---|---|---|
| குறியீட்டு இலக்கம் | | NP/21/05/Diet/ BHTEL/2023 | NP/21/05/Diet/ DGHKLN/2023 | NP/21/05/Diet/ DGHVAV/2023 | NP/21/05/Diet/ DGHMAN/2023 | NP/21/05/Diet/ DGHMUL/2023 |
| பெறுகை ஆவணங்களை பெறும் முகவரி | | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். 021 222 6253 | மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி A9 வீதி, கிளிநொச்சி 021 228 4111 | மாவட்ட பொது வைத்தியசாலை வவுனியா, A9வீதி வவுனியா 024 222 8094 | மாவட்ட பொது வைத்தியசாலை, மன்னார் 023 225 1550 | மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு 021 206 1423 |
| மீளளிக்கப்படாத வைப்பு | | Rs. 5000/= | Rs. 5000/= | Rs. 6000/= | Rs. 5000/= | Rs. 5000/= |
| Cate gory | Type of Food | பெறுகைப் பாதுகாப்புப் பிணைத் தொகை (ரூபா) | | | | |
| A | மரக்கறி வகைகள் | 50,000.00 | 25,000.00 | 60,000.00 | 26,000.00 | 26,000.00 |
| B | புழவகைகள் | 40,000.00 | 10,000.00 | 8,000.00 | 5,000.00 | 11,000.00 |
| C | இறைச்சி, முட்டை, மீன் | 50,000.00 | 20,000.00 | 90,000.00 | 40,000.00 | 48,000.00 |
| D,F | உலர் உணவு,, பைக்கட், ரின், போத்தலில் அடைக்கப்பட்ட உணவுகள் | 100,000.00 | 100,000.00 | 150,000.00 | 80,000.00 | 100,000.00 |
| E | பேக்கரி உணவுகள் | 15,000.00 | 12,000.00 | 14,000.00 | 15,000.00 | 9,000.00 |
| முழு வகைகளுக்கும் விண்ணப்பிப்பதாயின் | | **255,000.00** | **167,000.00** | **322,000.00** | **166,000.00** | **194,000.00** |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

02. ஓப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

    அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

    ஆ. அத்துடன் ,மூல உணவுகளை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

    இ. அத்துடன் வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. ஓப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 – பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மேலே காட்டப்பட்ட முகவரிகளில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை மேலே குறிக்கப்பட்ட முகவரியிலே வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரை பரிசீலிக்க முடியும்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கிலமொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை மேலே காட்டப்பட்ட முகவரிகளில் வேலைநாட்களில் 15 பெப்ரவரி 2023 ஆம் திகதி தொடக்கம் 28 பெப்ரவரி 2023 ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மேலே தெரிவிக்கப்பட்ட தொகையினை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

06. பெறுகை ஆவணங்கள் 1 மார்ச் 2023 ஆம் திகதி 10:00 மணிக்கு முன்பதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம், வடமாகாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

07. பெறுகைக்கு முன்னரான கூட்டம் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 22 பெப்ரவரி 2023 ஆம் திகதி காலை 10:00 மணிக்கு நடைபெறும்.

    மாநாட்டு மண்டபம், வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்

08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பிரிவுக்குமான பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும்.

09. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்தியநிபுணர்.டிலீப்.எச்.லியனகே,**

**தலைவர்,திணைக்களபெறுகைக் குழு (பெரிது)**

**வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**

**சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்,**

**தொ.பே - 021-222-0811, 021-222-0812, 021-222-0839 தொலைநகல்: 021-222-0818, 021-221-7905 மின்னஞ்சல்:** **capdhsnp@gmail.com**